விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, வைகாசி - 10 செவ்வாய் 25.05.2021 மலர் - 2, இதழ் - 49

# விஜயபாரதம் வார இதழ் முக்கிய அறிவிப்பு




கொரோனா பொதுமுடக்கம், தொற்று, புத்தகம் பதிப்பித்தல், சந்தாதாரர்களுக்கு தபாலில் அனுப்புதல் உள்ளிட்ட சில முக்கிய காரணங்களுக்காக விஜயபாரதம் வார இதழ் அலுவலகம் மேலும் ஒரு வாரம் மூடப்பட்டுள்ளது. இதனால் மே மாதம் 28க்கான இதழுடன் ஜூன் மாதம் 4க்கான இதழும் வெளியிட முடியாத சூழல் நிலவுகிறது என்பதை சந்தாதாரர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# கொரோனா மருந்தை தயாரிக்கும் திருப்பதி தேவஸ்தானம்

ஆந்திராவின் நெல்லூர் மாவட்டம், கிருஷ்ணபட்டணத்தைச் சேர்ந்த ஆனந்தய்யா என்ற ஆயுர்வேத மருத்துவர், கொரோனாவுக்கு ஆயுர்வேத மருந்து தயாரித்து நோயாளிகளுக்கு வழங்கி வந்தார். இந்த மருந்தின் மேல் மக்களுக்கு அதீதமான நம்பிக்கை வந்ததால் கூட்டம் கூட்டமாக நெல்லூருக்கு படையெடுக்கத் தொடங்கினர். காவலர்கள் பாதுகாப்புத் தர முடியாத அளவிற்கு கட்டுக்கடங்காத கூட்டம் கூடியது. அவரின் மருந்தின் நம்பகத்தன்மை குறித்து ஆராய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்நிலையில், இந்த மருந்தை குறித்து மேலும் அறிய திருப்பதி திருமலை தேவஸ்தானம், தாங்கள் நடத்தும் ஆயுர்வேத பல்கலைகழக அதிகாரிகள், அறங்காவலர் குழுவினரை கிருஷ்ணபட்டணம் அனுப்பியது. அவர்கள், ஆயுர்வேத மருத்துவர் ஆனந்தய்யாவை சந்தித்து உரையாடி, மருந்து தயாரிக்கப் பயன்படும் மூலிகைகள், தயாரிப்பு முறை உள்ளிட்டவற்றை நேரடியாக பார்வையிட்டு அறிந்தனர். ஆயுஷ், இந்திய மருத்துவ ஆராய்ச்சி மையம் உள்ளிட்ட துறைகளிடமிருந்து உரிய அனுமதி கிடைத்ததும் இந்த ஆயுர்வேத மருந்தை அதிக அளவில் தயாரித்து மக்களுக்கு வினியோகிக்க தேவஸ்தானம் முடிவெடுத்துள்ளது.



# கொரோனா சிகிச்சை புதிய கட்டணம்



தமிழ்நாடு அரசு பொது சுகாதார திட்டம், முதல்வரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத்திட்டத்தின் கீழ், கொரோனா சிகிச்சைக்கு தனியார் மருத்துவமனைகளில் பரிசோதனை மற்றும் சிகிச்சைக்கு திருத்தியமைக்கப்பட்ட புதிய கட்டணம் தொடர்பாக அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, ஆக்சிஜன் அல்லாத படுக்கை வசதியில் சிகிச்சை பெறுபவர்களுக்கு, ஒரு நாள் கட்டணமாக 5,000 ரூபாய் முதல் 7,500 ரூபாய் வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆக்சிஜனுடன் கூடிய படுக்கை வசதியோடு சிகிச்சை பெறுபவர்களுக்கு ஒருநாள் கட்டணமாக 15,000 ரூபாயும், வென்டிலேட்டருடன் கூடிய தீவிர சிகிச்சை பெறுபவர்களுக்கு, ஒருநாள் கட்டணமாக 35 ஆயிரம் ரூபாயும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதேபோல், Noninvasive ventilation என்று சொல்லக்கூடிய, தீவிர சிகிச்சைப் பிரிவில் ஊடுருவாத வென்டிலேட்டர்வசதியுடன்சிகிச்சைபெறும்நோயாளிகளுக்குநாள் ஒன்றின் கட்டணமாக 30 ஆயிரம் ரூபாயும், ஆக்சிஜனுடன் கூடிய தீவிர சிகிச்சை படிப்படியாகக் குறைப்பதற்கு மட்டுமான ஒருநாள் கட்டணமாக ரூபாய் 25 ஆயிரம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும், தனியார் மருத்துவமனைகளில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களைவிட கூடுதலான தொகை வசூலிக்கப்பட்டால், பாதிக்கப்பட்ட நபர் காப்பீட்டு திட்டத்தின் கட்டணமில்லா தொலைபேசி எண் 1800 425 3993 மற்றும் 104 என்ற எண்ணில் புகார் அளிக்கலாம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சௌமியா சுவாமிநாதன் கருத்து

கொரோனாவின் மூன்றாவது அலையில் குழந்தைகள் அதிக அளவில் பாதிக்கப்படுவர் என, மருத்துவ நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். ஏற்கனவே அமெரிக்கா கனடா, சிங்கப்பூர் உள்ளிட்ட பல நாடுகள் குழந்தைகளுக்கு தடுப்பூசி செலுத்த அனுமதி அளித்துள்ளன. பாரதத்திலும் அதற்கான பூர்வாங்க முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில், இது குறித்து உலக சுகாதார அமைப்பின் தலைமை விஞ்ஞானியும், குழந்தைகள் நல நிபுணருமான டாக்டர் சௌமியா சுவாமிநாதன் 'மூக்கு வழியாக செலுத்தக்கூடிய கொரோனா தடுப்பு மருந்தை தயாரிக்கும் பணி, பாரதத்தில் தீவிரமாக நடக்கிறது. இது அடுத்த ஆண்டு பயன்பாட்டுக்கு வரும். அதற்குள் பள்ளி ஆசிரியர்கள் அனைவரும் இரண்டு டோஸ் தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும். மூக்கு வழி செலுத்தப்படும் தடுப்பு மருந்து, குழந்தைகளின் மூச்சு குழாயில் தொற்று ஏற்படுவதை வெகுவாக குறைக்கிறது. இது பயன்பாட்டுக்கு வந்ததும், குழந்தைகளுக்கு தொற்று பரவுவது கட்டுக்குள் வந்துவிடும்.' என தெரிவித்துள்ளார்.



# வாட்ஸ்அப்பில் மின்தடை புகார்

மின் வாரியம் விடுத்துள்ள செய்தி குறிப்பில், 'மருத்துவ கல்லூரி மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், கொரோனா சிகிச்சை மையங்கள், ஆக்சிஜன் தொழிற்சாலைகள் போன்றவற்றுக்கு மின் வாரியம் சிறப்பு அலுவலர்களை நியமிக்க வேண்டும். தடையற்ற மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மண்டலம், மாவட்ட மேற்பார்வை பொறியாளர்கள் மேற்கொள்ள வேண்டும். ஊரடங்கின் போது அனைத்து நகர் மற்றும் புறநகர் பகுதிகள், மலைவாழ் மக்கள் உள்ள பகுதிகளில் தடையின்றி மின்சாரம் வழங்க வேண்டும். பொதுமக்களிடம் இருந்து மின் தடை தொடர்பாக பெறப்படும் புகார்களை உடனுக்குடன் சரிசெய்வதற்கு அனைத்து கட்டுப்பாட்டு மையங்களும் 24 மணி நேரமும் செயல்பட வேண்டும். மக்கள், மின் தடை புகார்களை 1912 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணில் அல்லது புகைப்படத்துடன் கூடிய தகவல் தெரிவிப்பதற்காக 94458 50811 என்ற வாட்ஸ்அப் எண்ணில் 24 மணி நேரமும் தெரிவிக்கலாம். இந்த எண்கள் பயன்பாட்டில் இருப்பதையும் மின் தடை தொடர்பான விபரங்களை உரிய பதிவேடுகளில் முறையாக பதிவு செய்வதையும் உறுதி செய்திட வேண்டும்.' என கூறப்பட்டுள்ளது.



# தி.மு.க.வின் கொரோனா களப்பணியாளர்கள்



'தி.மு.க.வினர், சென்னை அடையாறில் உள்ள மாநகராட்சி அலுவலகத்திற்குச் சென்று, தற்போது இருக்கும் களப்பணியாளர்களை நீக்கிவிட்டு, அவர்கள் சொல்லும் நபர்களை பணியில் அமர்த்த வேண்டும் என்று மிரட்டி உள்ளனர். அதற்கு அதிகாரிகள், கட்சிகளின் பரிந்துரையின் பேரில் களப்பணியாளர்கள் யாரும் நியமிக்கப்படுவதில்லை, பயிற்சி பெற்று, திறம்பட பணியாற்றிக் கொண்டிருக்கும் தற்போதைய களப்பணியாளர்களை மாற்றியமைத்தால் நோய்த்தடுப்புப் பணியில் தொய்வு ஏற்படும் என்று எடுத்துக்கூறியுள்ளனர் என பத்திரிகைகளில்செய்தி வந்துள்ளது. இப்படி அனைத்திலும் தி.மு.க.வினர் செயல்பட்டால் கொரோனா நோய்த்தடுப்புப் பணியில் தொய்வு ஏற்பட்டு, பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். முதலமைச்சருக்கும் அவப்பெயர் ஏற்படும். எனவே, கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள களப்பணியாளர்கள் நியமனத்தில் தி.மு.கவினர் ஈடுபடுவதை முதலமைச்சர் ஸ்டாலின் உடனடியாக தடுக்க வேண்டும்' என்று அ.தி.மு.க ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் வலியுறுத்தியுள்ளார்.

# மிசோரத்தில் மியான்மர் அகதிகள்



நமது அண்டை நாடான மியான்மரில் கடந்த பிப்ரவரி 1ல் ராணுவம் ஆட்சியை கைப்பற்றியதில் இருந்து அங்கு பலர் கொல்லப்பட்டுள்ளனர். அரசியல் தலைவர்கள், பத்திரிகையாளர்கள் என பலர் கைது செய்து சிறை வைக்கப்பட்டுள்ளனர். இதனால், உயிருக்கு அஞ்சி பாரதத்தின் எல்லையோர மாநிலங்களில் அங்கிருந்து வந்த பலர் அகதிகளாக தஞ்சம் அடைந்து வருகின்றனர். தற்போதுவரை 15,438 பேர் மிசோரம் மாநிலத்தில் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ளனர். இந்த எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகி வருவது கவலையளிக்கிறது. மியான்மர் பிரஜைகள் சிலர் மிசோரமில் உள்ள தங்கள் உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ளதால் இந்த எண்ணிக்கை மேலும் அதிகமாக இருக்கக்கூடும் என மாநில திட்டமிடல் வாரியத்தின் துணைத் தலைவர் எச். ராம்மாவி, வெளிவிவகார அமைச்சகத்தின் மியான்மர் மற்றும் பங்களாதேஷுக்கான இணைச் செயலாளர் ஸ்மிதா பந்த்துக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

# மக்களைத் தூண்டும் முஸ்லிம் அடிப்படைவாதிகள்



யூனியன் பிரதேசமான லட்சத்தீவில் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துவதை தடுக்கும் முயற்சியில், முஸ்லிம் பயங்கரவாத ஆதரவு அமைப்பினர் சிலர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இந்த யூனியன் பிரதேச நிர்வாகியான பிரபுல் படேல் மற்றும் மத்திய அரசிற்கு எதிராக பிரச்சாரங்களை அவர்கள் லட்சத்தீவில் செய்து வருகின்றனர். அங்குள்ள மொத்த மக்கள்தொகையில் 96% முஸ்லிம்கள் என்பதால் லட்சத்தீவின் ‘இஸ்லாமிய தன்மையை’ படேல் குறைத்து மதிப்பிடுவதாக அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். ஆனால், இந்த பயங்கரவாத ஆதரவு அமைப்புகளால் சி.ஏ.ஏ, என்.ஆர்.சி சட்டங்களை எதிர்த்து தீவுகள் முழுவதும்சுவரொட்டிகள் ஒட்டப்பட்டது, லட்சத்தீவுக்கு அருகே வெளிநாட்டு கப்பல்கள் சட்டவிரோதமாக நிறுத்தப்படுவது, 2019ல் இலங்கையில் இருந்து லட்சத்தீவு தீவுகளுக்கு 15 ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதிகள் சென்றது, சமீபத்தில் மினிகோய் தீவில் இருந்து கடலோர காவல்படையினரால் ரூ. 3,000 கோடி மதிப்புள்ள போதை பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டது, இலங்கை, ரவிஹான்சியில் இருந்து வந்த மீன்பிடி படகு ஒன்றில் இருந்து 300 கிலோ ஹெராயின் மற்றும் 1,000 துப்பாக்கி குண்டுகளுடன் 5 ஏ.கே 47 துப்பாக்கிகள் மீட்கப்பட்டது குறித்து புலனாய்வு அமைப்புகள் கவலை தெரிவித்திருக்கின்றன. இந்நிலையில், கடந்த 2020 டிசம்பரில், லட்சத்தீவின் நிர்வாகியாக பிரபுல் படேல் பொறுப்பேற்ற பின்னர், போதைப்பொருள் பயன்பாட்டை தடுக்க அங்கு 18 சோதனைகளை நடத்தியுள்ளார். லட்சத்தீவின் வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிக்கவும் தீவின் சுற்றுலா வாய்ப்புகளை மேம்படுத்தவும், தேச பாதுகாப்பில் அதன் முக்கியத்துவம் காரணமாக பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான முயற்சிகளையும் எடுத்து வருகிறார். ஆனால், கேரள கம்யூனிச, காங்கிரஸ் கட்சியினர் லட்சத்தீவின் முஸ்லிம் அடிப்படைவாதிகளுக்கு ஆதரவாக இருக்கினர். பிரபுல் படேலை அந்த பொறுப்பில் இருந்து நீக்குமாறு சி.பி.ஐ.எம் கட்சியின் மாநிலங்களவை எம்.பி எலமனம் கரீம், ஜனாதிபதி ராம்நாத் கோவிந்துக்கு கடிதம் எழுதியுள்ளார். காங்கிரஸ் கட்சித் தலைவர் வி.பி. பலராமும் அவர்களின் சட்டவிரோத போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கள்ளச்சந்தையில் விற்றால் சொத்துக்கள் பறிமுதல்



உத்தரபிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத், 'மாநிலத்தில் ரெம்டெசிவிர் ஊசி மருந்துகளை கள்ளச் சந்தையில் விற்பனை செய்பவர்கள் மீது கடுமையான தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் (என்.எஸ்.ஏ) கீழ் வழக்குப் பதிவு செய்யப்படும், அவர்களது சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும். கான்பூர் மருத்துவக் கல்லூரியில் 100 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் தீவிர சிகிச்சை பிரிவு (பி.ஐ.சி.யு) அமைக்கப்படும். இந்த மாத இறுதிக்குள் மாநில அரசு கொரோனாவின் இரண்டாவது அலைகளை முழுமையாக கட்டுப்படுத்தி விடும். கொரோனா தடுப்பூசி செலுத்துவதன் வேகம் அடுத்த மாதம் மாநிலம் முழுவதும் மேலும் அதிகரிக்கப்படும்' என அறிவித்துள்ளார்.


# ராஜஸ்தானில் மூன்றாவது அலையா?

கொரோனா தொற்றுடன் நமது நாடு போராடி வரும் வேலையில், ராஜஸ்தானில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு ஒரே நேரத்தில் பல குழந்தைகள் ஆளாகியுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ராஜஸ்தானின் துங்கர்பூரில் கொரோனா தொற்றுக்கு19 வயதிற்குட்பட்ட 325 பேரும் தவுசா மாவட்டத்தில் கிட்டதட்ட இதே அளவிலும் பாதிக்கப்பட்டுள்ளது கொரோனா பரிசோதனையில்தெரியவந்துள்ளது. ராஜஸ்தானின் இந்த இரு மாவட்டங்களிலிருந்தும் 600க்கும் மேற்பட்ட குழந்தைகள் கொரோனா தொற்றுக்கு ஆளாகியுள்ளனர். தேசிய குழந்தைகள் உரிமைகள் ஆணையம் (என்.சி.பி.சி.ஆர்), மூன்றாவது கொரோனா அலை நாட்டைத் தாக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளதால்,



குழந்தைகள் மற்றும் பிறந்த குழந்தைகளைப் பாதுகாப்பதற்கான மருத்துவ வசதிகளை அதிகரிக்க வேண்டும் என மத்திய, மாநில அரசுகளைக் கேட்டுக்கொண்டுள்ளது.

# அரசின் உத்தரவை மீறும் டைம்ஸ் நைவ்




கொரோனா வைரஸின் மாறுதல் அடைந்த புதிய B 1.617 வகையை 'இந்திய வகை கொரோனா வைரஸ்' என்று குறிப்பிடும் அனைத்து உள்ளடக்கங்களையும் நீக்குமாறு சமூக ஊடகங்களுக்கு மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் உத்தரவை பிறப்பித்திருந்தது. ஆனால், அந்த உத்தரவை மீறும் வகையில்,'டைம்ஸ் நவ்'அதன் டிவிட்டர் உள்ளிட்ட செய்திகளில் மீண்டும் 'இந்திய வகை வைரஸ்' என்ற வார்த்தையை பயன்படுத்தியுள்ளது. எனவே, 'டைம்ஸ் நவ்' மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்' என தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்திடம் மக்கள் கோரிக்கை வைத்துள்ளனர். சமீபத்தில் கசிந்த காங்கிரசின் கருவித்தொகுப்பில் (டூல் கிட்), B1.617 வகை வைரசை 'இந்திய வகை வைரஸ்' என்று பெயரிட்டு அழைப்பது குறித்த குறிப்புகள் இருந்தது. இந்த 'டூல் கிட்' விவகாரம் காங்கிரசின் தேச விரோத நடவடிக்கைகளை வெளிச்சம் போட்டு காட்டுவதாக பரவலான கண்டனத்திற்கு உள்ளானது என்பதும் நினைவு கூரத்தக்கது.

# மீண்டும் வெட்டுக்கிளி படையெடுப்பு

கொரோனா ஒருபுறம், கருப்பு பூஞ்சை பாதிப்பு மறுபுறம் என போராடி வரும் உத்தரபிரதேசம் உள்ளிட்ட வடமாநிலங்களில், தற்போது விவசாய நிலங்களில் வெட்டுக்கிளி தாக்குதலுக்கான வாய்ப்பும் அதிக அளவில் உள்ளது என உத்தரபிரதேச அரசு எச்சரித்துள்ளது. ராஜஸ்தானின் ஜெய்சால்மர் நகரில் வெட்டுக்கிளிகளின் கூட்டம் ஒன்று காணப்பட்டதை அடுத்து அதிகாரிகள் மாநில வேளாண்மைத்துறை தயாராக இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. விவசாயிகளும் எச்சரிக்கப்பட்டுள்ளனர். கடந்த ஆண்டு, பாகிஸ்தானில் இருந்து பயணித்த வெட்டுக்கிளி கூட்டங்கள், பாரதத்தில் படையெடுத்து ஐந்துக்கும் மேற்பட்ட மாநிலங்களில் சேதத்தை ஏற்படுத்திச் சென்றது. பாலைவன வெட்டுக்கிளிகள் உலகின் மிக அழிவுகரமான புலம்பெயர் பூச்சியாகக் கருதப்படுகிறது. ஒரு சதுர கிலோமீட்டருக்கு சுமார் 80 மில்லியன் வெட்டுக்கிளிகளைக் கொண்ட திரளாக இவை இருக்கும். ஒவ்வொரு நாளும் தங்கள் சொந்த எடை வரை பயிர்களை உட்கொள்ளும். இப்படி, மில்லியன் கணக்கான வெட்டுக்கிளிகள் பறக்கும் வழியெங்கும் உள்ள அனைத்து பயிர் வகைகளையும் உண்டு அழிக்கின்றன.



# பஞ்சாப் கோரிக்கை நிராகரிப்பு



மாநிலத்தில் தடுப்பூசி போடுவதை உறுதி செய்வதற்காக பஞ்சாப் அரசு, உலகளாவிய டெண்டரை வெளியிடுதற்கான சாத்தியங்களை ஆராய்ந்து வருகிறது.. இந்நிலையில், அமெரிக்க மருந்து நிறுவனமான மாடெர்னாவின் கொரோனா தடுப்பூசியைப் தனது மாநிலத்திற்கு நேரடியாக அனுப்புமாறு பஞ்சாப் அரசு விடுத்த கோரிக்கையை மாடெர்னா நிறுவனம் நிராகரித்துள்ளது. வட அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் கொரோனா தடுப்பூசிகளை சந்தைப்படுத்தி வரும் மாடெர்னா நிறுவனம், அவர்களின் கொள்கையின்படி, அவர்கள் மத்திய அரசுடன் மட்டுமே வியாபாரத்தில் ஈடுபடுவோம் எனத் தெரிவித்துள்ளது.


விஜயபாரதம் தேசிய வார இதழ்

சந்தா செலுத்த / புதுப்பிக்க
www.vijayabharatham.org
என்ற இணையதளம் அல்லது
044 - 26420870 என்ற தொலைபேசி
எண்ணில் தொடர்பு கொள்ளவும்

# கொரோனாவை அதிகரிக்கும் விவசாய போராட்டம்

விவசாய சட்ட எதிர்ப்புப் போராட்டங்கள் எனும் பெயரில் வன்முறைகளை செய்து வரும் விவசாய சட்ட எதிர்ப்பாளர்கள், போராட்டம் ஆரம்பித்து ஆறு மாதங்கள் நிறைவடைந்ததையும் தேதி குறிக்கும் வகையில் வரும் மே 26ம் தேதியை ஒரு ‘கருப்பு தினம்’ என்று குறிப்பிடும் விதத்தில் அன்று போராட்டத்தை தீவிரப்படுத்த பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகின்றனர். இதற்காக பலரை பணம் கொடுத்து திரட்டி டெல்லியின் எல்லைப்பகுதிக்கு அனுப்ப முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இவர்களுக்கு காலிஸ்தான் பயங்கரவாதிகள் நிதியுதவியும் காங்கிரஸ், ஆம் ஆத்மி, தேசியவாத காங்கிரஸ், சமாஜ்வாடி உள்ளிட்ட பல கட்சிகளும் ஆதரவு அளித்து வருகின்றன. இந்த போராட்டத்திற்கு விவசாயிகள் கிராமங்களில் இருந்து சிறிய சிறிய கூட்டங்களாக அனுப்பப்படுகிறார்கள், ஷிப்டு முறையில் போராடிவிட்டு வீடு திரும்பும் இவர்களால் அவர்களது குடும்ப உறுப்பினர்களும்கூட கொரோனா தொற்றுநோய்க்கு ஆளாகின்றனர். கொரோனா தொற்றால் சிலர் இறந்தும் உள்ளனர். பஞ்சாபில் கொரோனா தாக்கம் அதிகரிப்புக்கு விவசாய போராட்டம்தான் முக்கிய காரணம் என பஞ்சாப் அமைச்சர் டிரிப்ட் ராஜீந்தர் சிங் பஜ்வா ஒரு நேர்காணலில் ஏற்றுக்கொண்டார் என்பதும், டெல்லி, ஹரியானா மற்றும் பஞ்சாபில் கொரோனா அதிகரிப்புக்கு விவசாய சட்ட எதிர்ப்பு போராட்டங்களும் ஒரு முக்கிய காரணம் என மத்திய அரசிற்கு அனுப்பப்பட்ட ஒரு அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. கொரோனா வைரஸ் தொற்று இரண்டாவது அலையுடன் நாடு போராடி வரும் சூழலில் வரும் 26ம் தேதி அன்று அவர்கள் நடத்த உள்ள போரட்டங்களால் கொரோனா தொற்றும் அதன் பாதிப்பும் அந்த மாநிலங்களில் அதிகரிக்கவே செய்யும் என்ற அச்சம் மக்களிடம் அதிகரித்துள்ளது.



# மக்களைக் குழப்பும் தேவாலயங்கள்

பாரதத்தின் நாகாலாந்து உள்ளிட்ட வடகிழக்கு மாநிலங்களில் தடுப்பூசி போட்டுக்கொள்வதில் மக்கள் தயக்கம் காட்டுகின்றனர். இதற்கு அங்குள்ள சில கிறிஸ்தவ தேவாலயங்கள், கிறிஸ்தவ குழுக்கள்தான் காரணம் என கண்டறியப்பட்டு உள்ளது. சில கிறிஸ்தவ அமைப்புகள், நமது நாட்டுத் தயாரிப்பை எதிர்க்கின்றன ஆனால், சீன கொரோனா வைரஸ் தடுப்பூசிகளை எடுத்துக்கொள்வதற்கு மக்களை ஊக்கப்படுத்துகின்றன என்பதும் தெரிய வந்துள்ளது. 'நாகா பாப்டிஸ்ட் சர்ச்' அமைப்பினர், 'மூலிகைகளும் ஏசுவின் மீதான நம்பிக்கையும் குணப்படுத்த போதுமானது' எனகூறி மக்களைகுழப்பி தடுப்பூசி போட்டுக்கொள்ள விடாமல் தடுக்கின்றனர். இந்த ஆண்டு ஜனவரியில், 'கிழக்கு

சீயோன் குணப்படுத்தும் மினிஸ்டரி' என்ற ஒரு கிறிஸ்தவ அமைப்பு வெளியிட்டுள்ள ஒரு தீர்க்கதரிசனத்தில் 'கொரோனா தடுப்பூசி கடவுளின் விருப்பம் அல்ல, விசுவாசிகள் அவற்றை எடுத்துக் கொள்ள வேண்டாம்' என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது. மேலும், 'தடுப்பூசி மூலம் சாத்தானின் சின்னம் வரும், தடுப்பூசியால் உடலில் மைக்ரோசிப் செலுத்தப்படும், தடுப்பூசியை எடுத்துக் கொள்வோர் கிறிஸ்துவின் ராஜ்ஜியத்தில் நுழைய முடியாது' என்றும் கூறப்பட்டுள்ளது. ஏற்கனவே கடந்த 2018ம் ஆண்டில்கூட இதே போன்ற தீர்க்கதரிசனத்தை இந்த கிறித்தவ அமைப்பு வெளியிட்டது. அதில், 'ஆதார் அட்டை மற்றும் ரூபெல்லா தடுப்பூசிகள் கடவுளின் விருப்பத்திற்கு எதிரானவை' என்று



கூறப்பட்டன. கடந்த 2021 ஏப்ரலில் 5 நாட்கள் இந்த சர்ச் நடத்திய மறுமலர்ச்சி முகாமிற்கு பிறகு, அந்த நிகழ்வில் கலந்துகொண்ட 69 பேரில் 45 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டதும், அதன் பிறகு நாகாலாந்தில் கொரோனா பரவலின் தாக்கம் 13 சதவீதமாக அதிகரித்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## முஸ்லிம்களுக்கு எதிரான பாகிஸ்தானும் துருக்கியும்



கம்யூனிச கட்சி ஆட்சி செய்யும் சீனாவில் பல ஆண்டுகளாக உய்குர் முஸ்லிகள் கொடுமைப்படுத்தப்படுகின்றனர் என்பதை உலகே அறியும். தற்போது அங்கே 10 லட்சத்திற்கும் அதிகமான உய்குர் முஸ்லிம்கள் சித்ரவதை முகாம்களில் அடைக்கப்பட்டுள்ளனர். முஸ்லிம் பெண்கள் கற்பழிக்கப்படுவது, கருத்தடை, குழந்தைகள் பெற்றோரிடம் இருந்து பிரிக்கப்படுவது, அடிமை வேலை, மறு கல்வி, முஸ்லிம் வழிபாட்டுத்தலங்கள், கல்லறைகளை இடித்து அங்கு கழிப்பறைகள் கட்டுவது உள்ளிட்ட பல கொடுமைகள் அங்கு தினம்தோறும் நடைபெற்று வருகின்றன. இதனால் ஒரு சிலர் தப்பித்து பாகிஸ்தான், துருக்கி, எகிப்து உள்ளிட்ட முஸ்லிம் நாடுகளுக்கு அடைக்கலம் புகுந்தனர். முதலில் அவர்களை ஏற்றுக்கொண்ட அந்த நாடுகள், பிறகு, அவர்களுக்கு முஸ்லிம்களின் மீதான பாசத்தைவிட சீனா தரும் பணத்தின் மீது தான் பாசம் அதிகம் என்பதை நிரூபிக்கும் விதமாக, அங்கு குடியேறிய உய்குர் முஸ்லிம்களை பயங்கரவாதிகள் என முத்திரை குத்தி மீண்டும் சீனாவிற்கே திருப்பி அனுப்புகின்றன. சமீபத்தில் சீனாவை பாகிஸ்தானுக்கான 'புதிய காற்றின் சுவாசம்' என புகழ்ந்த பாகிஸ்தானின் பிரதமர் இம்ரான் கான், அதே பேட்டியில் சீனாவின் உய்குர்களின் நிலைமை குறித்து கேட்டபோது 'அது குறித்து எனக்கு எதுவும் தெரியாது' என்று கூறி மழுப்பினார். கடந்த 2009ல், உய்குர்கள் மீதான சீனாவின் அடக்குமுறையை 'இனப்படுகொலை' என்று குற்றம் சாட்டிய துருக்கி நாட்டு அதிபர் ரெசெப் தயிப் எர்டோகன், தற்போது அங்கு வாழும் 35 ஆயிரத்திற்கும் அதிகமான உய்குர் முஸ்லிம்களை சீனாவிற்கே மீண்டும் கொஞ்சம் கொஞ்சமாக நாடு கடத்தி வருகிறார். முஸ்லிம்களின் தேசம் என கூறிக்கொள்ளும் பாகிஸ்தானும் முஸ்லிம் நாடுகளுக்கு தலைவராக மாற முயற்சி எடுத்து வரும் துருக்கியும் தற்போது தங்கள் உண்மை முகத்தை காட்டியுள்ளதாக உய்குர் முஸ்லிம்களுக்காக போராடும் பிரதிநிதிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

# சேவைத்துளிகள்











தாம்பரம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் ஆர்.எஸ்.எஸ், சேவாபாரதி, இந்து முன்னணி மற்றும் பா.ஜ.க தொண்டர்கள் இணைந்து செய்த சில கொரோனா கால தொண்டுகள்.






# ஸ்ரீ நரசிம்ம ஜெயந்தி



**வை**ஷ்ணவர்களின் முதன்மைக் கடவுளாக நரசிம்மரை வழிபட்டு வருகின்றனர். தன்னை நம்பும் பக்தர்கள் அழைக்கும் குரலுக்குச் செவிமடுத்து அவர்களின் நம்பிக்கை வீண்போகாமல், துயர் துடைக்க ஓடோடி வருபவராக நரசிம்ம அவதாரம் அமைந்துள்ளது. மகாவிஷ்ணு எடுத்த அவதாரங்களிலேயே அவருக்கே மிகவும் பிடித்த அவதாரம் என்றால் அது நரசிம்ம அவதாரம்தான்.

மகா விஷ்ணுவின் தசாவதாரங்களில் 4வது அவதாரம் இது. "சாகா வரம் கிடைக்காது" என்பதை அறிந்த அரக்கன் இரணியன் சிவபெருமானிடம் வினோத வரத்தை கேட்டார். "பகலிலும், இரவிலும் மரணம் ஏற்படக்கூடாது, மனிதனாலும், மிருகத்தாலும் மரணம் ஏற்படக்கூடாது, ஆகாயத்திலும், பூமியிலும் மரணம் நிகழக்கூடாது, எந்தவொரு ஆயுதத்தாலும் மரணம் நிகழக்கூடாது." என எந்தெந்த வழியில் மரணம் நிகழுமோ அதை எல்லாம் தடுக்கும் வகையில் வரத்தைப் பெற்றான் இரணியன். அதன் விளைவாக மக்களையும், தேவர்களையும் கொடுமைப் படுத்தினான்.

இரணியனை அழிப்பதற்காக சிங்க முகமும், மனித உடலும், பெரிய நகங்களுடன், நாராயணனை நம்பி அழைத்த பிரகாலதனைக் காக்க அவதரித்தார் நரசிம்மர். இரண்யன் எந்த இடத்தைத் தாக்கினாலும், அந்த இடத்தில் இருந்து வெளிபட்டு இரண்யனை வதம் செய்யத் தயாரான உருவத்துடனே எங்கெங்கும் வியாபித்திருந்தார். பிரகலாதன் காட்டிய தூணை இரண்யன் பிளக்க, தூணில் இருந்து வெளிப்பட்ட நரசிம்மர், இரண்யனை வதம் செய்தார். இரண்யனை நரசிம்மர் வதம் செய்த திருத்தலம்தான் அகோபிலம்.

நரசிம்மரின் அவதாரக் காலம் வெறும் இரண்டு நாழிகையே என்பது அவரது சிறப்புகளில் ஒன்று. நாம் எத்தனை வருடங்கள் பூமியில் வாழ்ந்தோம் என்பதைவிட, நாம் இருக்கும்போது என்ன சாதித்தோம் என்பதை உலகிற்கு உணர்த்திய முதல் அவதாரம் நரசிம்ம அவதாரம்.

நரசிம்மரைக் குளுமையாக்கும் வகையில் இளநீர், பால், பானகம் போன்ற குளுமையான பொருட்களை வைத்து பூஜை செய்து வழிபடுவது சிறப்பு. நரசிம்மரை தரிசித்தால்

திருமணத் தடைகள் நீங்கும், கடன் தொல்லைகளுக்குத் தீர்வு கிட்டும், நீண்ட நாள் பிணி சரியாகும், நீதிமன்ற வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும் என்று கூறப்படுகிறது.

ஆர். கிருஷ்ணமூர்த்தி

# வரமெல்லாம் தரும் வைகாசி விசாகம்

**வை**காசி விசாக தினத்தில் ஆறுமுகன் அவதரித்த நாளாக கொண்டாடப்படுகிறது. இந்த தினத்தில் நாம் விரதம் இருந்து வழிபாடு செய்தால் நமக்கு முருகனின் அருளும், நீண்ட ஆயுள் கிடைக்கும். பங்குனி மாதத்தின் உத்திரம் போல, தை மாதத்து பூசம் போல, கார்த்திகை மாதத்தின் கார்த்திகை போல, வைகாசி மாதத்தில் விசாகம் முருகப் பெருமானுக்கு உகந்த அற்புதமான நாள். வைகாசி விசாகம் தான் எமதர்மன் அவதரித்த நாளும்கூட. இந்நாளில் எமனை வணங்கி எம பூஜை செய்வதால் நோய்கள் நீங்கி நீண்ட ஆயுளை அவர் வழங்குவதாக ஐதீகம்.

விசாக நட்சத்திரம் என்பது ஆறு நட்சத்திரங்களின் கூட்டம். விசாக நட்சத்திரத்தில் பிறந்ததால் முருகப் பெருமானை விசாகன் என்றும் அழைக்கின்றனர். அர்ஜுனன் பாசுபத ஆயுத்தை சிவபெருமானிடமிருந்து பெற்ற நாள் வைகாசி விசாகம். திருமழப்பாடியில் சிவபெருமான் மழு ஏந்தி திருநடனம் புரிந்ததும், பன்னிருஆழ்வார்களில் ஒருவரான நம்மாழ்வார் பிறந்த தினமும் இந்நாளே. வடலூரில் ராமலிங்க அடிகளார் சத்யஞான சபையை நிறுவியதும் இந்நாள்தான்.

கௌதம புத்தர் பிறந்த நாளும், அவர் ஞானத்தை அடைந்த நாளும் வைகாசி பௌர்ணமி அன்றுதான். இதனையே புத்த பூர்ணிமா என்று அழைக்கின்றனர். வைகாசி என்பதை விகாஸம் என்றும் கூறுவதுண்டு. விகாஸம் என்றால் மலர்ச்சி என்றும் பொருள். வைணவர்கள் இம்மாதத்தை மாதவ மாதம் என்றழைப்பார்கள்.

வால்மீகி இராமாயணத்தில், விஸ்வாமித்திரர் இராம லட்சுமணர்களுக்கு குமரனின் பிறப்பையும் பெருமைகளையும் கூறுவார். இதனை கூறுபவர் மற்றும் கேட்பவர்களுக்கு பாவங்கள் நீங்குவதாக சொல்லுவார். இந்நிகழ்வை 'குமார சம்பவம்' என்று வால்மீகி குறிப்பிடுவார். இதனை பின்பற்றியே காளிதாசர் முருகனின் பிறப்பு மற்றும் அவரின் பெருமைகள் பற்றி கூறி அந்நூலிற்கு 'குமார சம்பவம்' என்றும் பெயரிட்டுள்ளார்.

இன்று நம் வீட்டில் விளக்கேற்றி, முருகப்பெருமானுக்கு சர்க்கரைப் பொங்கல் அல்லது எலுமிச்சை சாதம் நிவேதனம் செய்து பிரார்த்தனை செய்து, இயலாதவர்களுக்கு எலுமிச்சை சாதம் வழங்கி முருகப்பெருமானின் அருளுக்கு பாத்திரமாவோம். கேட்கும் வரம் அனைத்தும் தந்தருள்வான் வடிவேலன்.

சங்கீதா சரவணகுமார்